European Union

# இணைந்த அறிக்கை

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ரொமேனியா தூதரகங்கள் மற்றும் ஐக்கிய இராஜ்ஜிய உயர் ஸ்தானிகராலயம், நோர்வே மற்றும் சுவிட்சர்லாந்து தூதரகங்கள் மற்றும் கனடா மற்றும் அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் உடன்பாட்டுடன் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு பின்வரும் அறிவித்தலை வெளியிடுகிறது.

போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில், 43 வருட காலமாக பின்பற்றப்படாமலிருந்த மரண தண்டனை விதிப்பு முறையை இலங்கை அரசாங்கம் மீள ஆரம்பிக்கவுள்ளதாக அண்மையில் அறிவித்திருந்தது. உலகளாவிய ரீதியில் போதைப் பொருட்களுக்கெதிரான போராட்டம் என்பது கடுமையான சவாலாக அமைந்துள்ளது என்பதை நாம் அறிந்துள்ளதுடன், சட்ட விரோதமான போதைப் பொருள் விற்பனையை கட்டுப்படுத்துவது என்பது மிகவும் அத்தியாவசியமானதாகும். இருந்த போதிலும், மரண தண்டனையை அமுலாக்குவதனூடாக இதனை கட்டுப்படுத்தலாம் என்பதற்கு போதியளவு ஆதாரங்கள் இல்லை. போதைப் பொருட்கள் கொண்டுள்ள ஆபத்தை தணிப்பதற்கு எமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள நாம் தயாராகவுள்ளோம்.

பரவலான சட்ட கட்டமைப்புகளையும், பாரம்பரியங்களையும், கலாசாரங்களையும் சமய பின்புலங்களையும் கொண்டுள்ள உலகின் மூன்றில் இரண்டுக்கு அதிகமான நாடுகள், மரண தண்டனையை இல்லாமல் செய்துள்ளன அல்லது அதனை பின்பற்றுவதில்லை. மரண தண்டனையானது மனித விழுமியம் மற்றும் ஒன்றிணைவு ஆகியவற்றை ஏற்றுக் கொள்ள முடியாத வகையில் தவிர்ப்பதாக அமைந்துள்ளது.

2018 டிசம்பர் மாதம் இடம்பெற்ற 73 ஆவது ஐக்கிய நாடுகள் பொது ஒன்றுகூடலில் மரண தண்டனைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தையும் செயலாற்றுமாறு நாம் கோரிக்கைவிடுக்கிறோம்.

கொழும்பு, 08 ஏப்ரல் 2019

முற்றும்


தொடர்புகளுக்கு:
Political, Trade and Communications Section
Delegation of the European Union to Sri Lanka and the Maldives
Tel: + 94 11 2674413-4